
# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ❊ பங்குனி 1987 ❊ இதழ் - 135


## எருதுகளை நம்பி எங்கள் வாழ்வு அமைகிறது

ஊருக்குச் சோறுபோடும் உழவன் அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்து, கடமைகளை முடித்துத் தொழுவத்திற் கிடந்த எருதுகளைத் தட்டி எழுப்பி நுகத்தால் பிணைத்து முன் போகவிட்டுப் பெரிய கலப்பையைத் தூக்கித் தன் தோளிற் சுமந்து, விடியு முன் எருதின் வால் அடிபற்றிப் பகல் முழுவதும் உழுவதற்குப் போகிறானே! அவன் வாழ்க. அவன் விளைவு பெருக! அவன் வீரம் வெல்க! அவனுக்குப் பரணிபாடிக் கும்மியடிப்போம்.



"அழகிய நகரை அவன் அறிந்ததில்லை, அறுசுவை உணவுக்கு அவன் வாழ்ந்ததில்லை. அழகிய நகருக்கு அறுசுவை உணவை வழங்குதல் அவனது வழக்கம். அதனை விழுங்குதல் மற்றவர் மேன்மை ஒழுக்கம்.'' என்றார் பாரதிதாசன்.

இன்னும் சொல்லுகிறார் –

'' அடடே! செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன் செல்லும் புது நடையில் பூரித்தாள், விளைந்த நன்செய் நிலத்தினிலே என் விழியை நிறுத்தினாள்! என் நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்'' என்கிறார். இன்னும் சொல்கிறார்.

"ஏரியிலே மண்ணெடுத்துக் கரை உயர்த்தும் தோழர்களே இப்பெரிய நாட்டின் ஆணி வேரினிலே நெற்றி வேர்வை நீரை விட்டு வளர்த்திடுகின்ற நாட்டு மக்காள்!''

இதற்குமேல் என்ன சொல்லுகிறார்?

'' சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி நெல் சேர உழுது உழுது பயன் விளைக்கும் நின்ற உழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்? என்று கேட்கிறார்.

அடுத்து உழவனின் தோள்கள் மாத்திரமல்ல, அவன் தோளினைத் தழுவும் மயில் போன்ற சாயல் மடந்தை என்ன செய்கிறாள்? ஊருக்கு உண்டி கொடுப்பதற்காக அவளும் குழந்தைகளும் வயலில் இறங்கித் தான் வாடினாலும் பயிர் வாடக்கூடாது என்று கருதி, "மின்னுடல் வளைய வளையல்கள் பாட விரைவில் செங்காந்தள் விரல் வாட களை எடுக்கிறாள்.

★ வளரும் வேளாண்மைச் சிறப்பிதழ் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனர் தேவாரம்

### திருக்கலயநல்லூர்

பண் – தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்பும்வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே கரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே.

திருச்சிற்றம்பலம்

தென்னங்குரும்பை போலும் தனங்களையும், பூக்களை யணிந்த கூந்தலையும் உடையவராய உமையம்மையாரின் தவத்தையறிந்து, அவளையடைந்து திருமணக்குறிப்போடு அவளின் அன்பினை ஆய்ந்து, அவள் விரும்பிய வரத்தைக் கொடுத்தருளி, அவளைத் திருமணஞ் செய்தருளிய தேவர்கள் தலைவரும் முக்கண் மூர்த்தியுமான இறைவனின் ஊரை வினவின், அரும்புகளின் அருகில் ஆண் வண்டுகள் இசைகூட்ட, பெண்வண்டுகள் பண்பாட மயில்கள் ஆடுகின்ற அரங்காகிய அழகிய சோலையைச் சூழ்ந்த அயலிடத்தில், கரும்பின் அருகே குவளை மலர்கள் கண் ணுறங்குகின்ற வயல்களில் தாமரை மலர்கள் முகமலருகின்ற திருக்கலய நல்லூரேயாம்.

# திருவள்ளுவர் - திருக்குறள்

## வினைத்திட்பம்

நல்ல செயல்களைச் செய்து முடித்தற்குரிய மனவுறுதி.

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.**

வேலைத்திடம் என்பது அதனைச் செய்யும் ஒருவனுடைய மனவுறுதியேயாம். மற்றக் கருவிகளின் உறுதியெல்லாம் திட்பம் என்று சிறப்பித்துச் சொல்லத்தக்கன வன்று.

### Firmness in Action

What is called strength of action is strength of mind. The others are different.



# for Children

Swami Sivananda

Obey your parents and teachers.
Have faith in God.
Keep good company.
Do not smoke.
Speak the truth.
Speak sweetly.
Think carefully.
Do not be stubborn;
Be willing to change.
Serve all and love all.
Be neat and clean.
Be kind to all.
Be merciful to living beings.
Be as busy as a bee.
Time is valuable.

# பூமிதிருத்தியுண்

நாடோடிகளாய்த் திரிந்த மக்கள் ஓரிடத்தில் நிலையாக வாழத்தலைப்பட்ட காலத்தில் முதலில் செய்த தொழில் விவசாயம். பூமித்தாயைச் சரண்டி அவள் தந்த ஆக்கத்தை உண்டு வாழ்ந்த காலம். தொடர்ந்து வந்த தொழில் என்றும் உடன் திரிந்த மந்தைகளைப் பெருக்கிப் பயன்படுத்திய வேலை. பசு பால் தர, காளை வயல் உழவும் பொதி சுமக்கவும் பயன் தந்தன. பசுவைத் தொடர்ந்து ஆடு, எருமை முதலிய கால் நடைகளும் வந்து சேர்ந்தன. உணவுக்கு அடுத்தது உடை. பருத்தி நூல் நெசவு பழைய காலத்திலேயே நடைபெற்றது. பருத்திச் செய்கைக்கும் பூமித்தாய் இடம் கொடுத்தாள்.

★ உரம் உதவுவது போல் ஊரார் உதவமாட்டார் ★




## தமிழோசை

பரமேஸ்வராக் கல்லூரிக் கட்டடங்களும் வளவும் மரங்களும் தமிழோசை கேட்டனுபவம் வாய்ந்தவை. சேர். இராமநாதன், நடேசபிள்ளை, பண்டித இராசையனூர், நவநீதகிருஷ்ணபாரதியார், சுந்தரராச ஐயங்கார், பேராசிரியர் செல்வநாயகம், வித்துவான் கார்த்திகேயன் எழுப்பிய தமிழோசை ஒருபால். தமிழ்த் தாயின் சகோதரி சமஸ்கிருதத்தின் ஓசை துரைச்சாமி சாஸ்திரிகள், சிதம்பரசாஸ்திரிகள், சீதாராமசாஸ்திரிகள் எழுப்பிய ஓசை ஒருபால், அங்கே நடந்த தமிழ்விழா, நவராத்திரி விழா, லட்சிய ஐயந்தி விழாக்களில் அ. ச. ஞானசம்பந்தன், தெ. பொ. மீனாட்சி சுந்தரனூர், வச்சிரவேலு முதலியார், அருணை வடிவேலு முதலியார் எழுப்பிய ஓசை ஒருபால். இப்பால் இசைத் தமிழில் எம். எஸ். சுப்புலட்சுமி, எம். எல். வசந்தகுமாரி எழுப்பிய கீதவோசை மறுபால். அப்பால் பந்தநல்லூர் ஜயலட்சுமி எழுப்பிய பரதநாட்டியச் சலங்கையோசை ஒருபால். இப்பால தாய ஓசை எல்லாம் ஓய்ந்தடங்கியவேளையில் இன்று பல்கலைக்கழகத் தமிழ்மன்றம் எழுப்பிய தமிழோசை வீதி வாய்க்கேட்ப வெளி வந்துள்ளது. நூற்றுக்கு அதிகமான பக்கங்களில் அரிய விடயங்கள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், 'மாணுக்கர் மாணுக்கியர் குரல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தரமான காகிதத்தில் அழகான அமைப்பில் வெளிவந்த தமிழோசை இருபது ரூபாவுக்கு மலிவு.

## அடுத்த தலைமுறை வாழ வழி

எங்கள் தலைமுறையில் விவசாயம் ஓரளவு முன்னேறி வருகிறது. பிரதேசமெங்கும் பால் வழங்கும் நிலையங்கள் நிலவுகின்றன. பலர் கட்டாயமாகப் பால் பருகுவதில் கவனமெடுக்கிறார்கள். பிரதேசமெங்கும் பலவித மரக்கறி வகைகள் நன்றாக விளைகின்றன. பழவர்க்கங்கள் கிழங்கு வகைகளும் அவ்வப்பருவ காலங்களிற் கிடைக்கின்றன. இவற்றை இன்னும் அதிகரிக்கச் செய்தல் நம் கடமை. தோட்டம் போவோம் என்னும் சுலோகம் ஐம்பதாண்டுகளாக ஒலிக்கிறது. இந்த ஒலி வீதி எங்கும் கேட்டும் விளைவு பற்றாக்குறையாகவே இருக்கிறது. நாம் ஒவ்வொரு சதுரஅடி நிலத்தையும் பயன்படுத்தல் வேண்டும். நிலத்துக்கும் வசதிக்கும் தகுந்த வகையில் செடி கொடிகளையாவது நாட்டிப்பயன் பெறல் வேண்டும். பூச்சட்டிகளில் மிளகாய், தக்காளி, வெண்டி, கத்தரி இடம் பெற வேண்டும். இயன்றளவு வளவுகளில் ஆமணக்கு, சூரிய காந்தி எண்ணெய் வித்துக்களைத் தருதல் விரும்பத்தக்கது. சோயாவும் நிலக்கடலையும் இன்னும் பெருமளவில் பயிராதல் வேண்டும். வயல்களில் வேளையறிந்து பயறு, உளுந்து பயிராக வேண்டும்.

பாடசாலைகளிலும், பயிற்சிக்கலாசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் விவசாயம் பாடமாக அமைந்துள்ளது. விவசாயப் பட்டதாரிகள், பயிற்சி நெறியறிந்தவர்கள் தோட்டம் போதல் வேண்டும். மக்களிடம் போதல் வேண்டும். அவர்களுடன் உரையாடல் வேண்டும். உறவாடுதல் வேண்டும். அவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து விளக்கங்கள் கொடுக்க வேண்டும்.

## விடுகதை

1. குரல் உண்டு உடல் இல்லை
2. கண் காண உருவம் உண்டு
   கட்டிப்பிடிக்க உருவம் இல்லை
3. பேசாமல் பேசுவான்
   சொல்லாமல் சொல்லுவான்
4. அகல நெற்றியில் அழகான பொட்டு
5. தட்டும் தாளம் நின்றுவிட்டால்
   ஆட்டம் எதுவும் நடக்காது.
6. அங்கமுத்து வாசலிலே
   தங்கமுத்து காய்கிறது.
7. அரிசிபோலப் பூப்பூக்கும்
   அம்மாடி என்னக் காய்காய்க்கும்
8. அண்ணுத்துரையின் தோட்டத்திலே
   அழகாய்ப் பச்சைப்பாய் கிடக்குதாம்
9. அண்ணுத்துரையின் தோட்டத்திலே
   ஆடி அசையுதாம் பாம்பு
10. ஒரு காலடி நாலிலைப்பந்தலடி.

1. காற்று 2. புகை 3. புத்தகம்
4. வானம் சந்திரன் 5. இருதயம் 6. மிளகாய்
7. மிளகாய் 8. கீரை 9. புடோல் 10. அரைக்கீரை

~

1. ஏருத மரத்திலே எண்ணூறுகாய்.
2. மண்ணுக்குள்ளே இருப்பான் மாயாண்டி
   உரிக்க உரிக்கத் தோலாண்டி.
3. வித்தில்லாமல் விளைவதென்ன மந்திரி
   வெட்டாமலே சாய்வது தான் மன்னு.
4. அடி மலர்ந்து நுனிமலராப்பூ
   என்ன பூ தம்பி?
5. ஒற்றைப் பிள்ளை பெற்றபின் உயிரைவிட்டவள்
   அவள் யார்?
6. சேற்றுக்குள்ளே சிவப்புக் காடை
7. கட்டைப் பெண்ணுக்குப்
   பட்டுப் புடைவை.
8. கொடியோ கோணல் மாணல்
   இலையோ தாறு மாறு
   பூவோ மஞ்சள், காயோ கசப்பு.

1. குரக்கன் 2. வெங்காயம் 3. வாழை
4. வாழைப்பூ 5. வாழை 6. சேப்பங்கிழங்கு
7. வெங்காயம் 8. பாகற்காய்

★ முப்போகம் பயிரிட்டால் முன்னேற்றம் அடையலாம் ★



செல்வத்தின் நாயகி, சிந்தையின் நாயகி
செந்தாமரையாட்டி செஞ்சுடர்ச்செல்வி!
உள்ளும் புறமும் உறைபவள் நீயே
ஊறுகள் தவிர்க்கும் உத்தமி நீயே
உறவும் உரமும் ஊக்கமும் நீயே
உம்பர்கள் போற்றும் இன்பமும் நீயே
பாற்கடல் தோன்றிய பாவையும் நீயே
பத்மநாதனின் பாவையும் நீயே
சக்தி சாவித்திரி காயத்திரி நீயே
சதுர்மறை கூறும் சக்தியும் நீயே
பக்தர்கள் அழைக்கப் பரிவுடன் வருவாய்
பாலரைக் காக்கும் பங்கஜ வல்லி
சம்பத்தெல்லாம் தருவாய் சரணம்
சாந்தி நிலவ வைப்பாய் சரணம்
குழந்தை உள்ளம் தருவாய் சரணம்
குற்றமில் செல்வம் தருவாய் சரணம்

## நாட்டுப்புறப் பழமொழிகள் சில

1. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
2. எண்ணிச் செய்கிறவன் செட்டி
எண்ணாமற் செய்கிறவன் மட்டி
3. ஆடிப்பட்டம் தேடி விதை
4. பருவத்தே பயிர்செய்
5. உரம் செய்வது ஊரார் செய்யார்
6. தோட்டி போல் உழைத்து
துரை போல் சாப்பிட வேண்டும்
7. கணக்கன் கணக்கறிவான்
தன் கணக்கைத் தானறியான்
8. அந்தியில் ஈசல் வந்தால்
அடை மழை அதிகரிக்கும்
9. ஆடியில் காற்றடித்தால்
ஐப்பசியில் மழை பெய்யும்
10. ஆறில்லாத ஊரில் அழகு பாழ்
11. ஆறு போவதே போக்கு
அரசன் செய்வதே தீர்ப்பு
12. பனி பெய்து கடல் நிறையாது
13. தை பிறந்தால் வழி பிறக்கும்
14. தொழுவம் புகுந்த ஆடு
பிழுக்கை இடாமற் போகுமா?
15. காகம் வலமானல் ஆயுள் விருத்தியாகும்
16. குதிரை ஏறாமற் கெட்டது
கடன் கேளாமற் கெட்டது
17. குரங்கு ஏறாத கொம்பு உண்டா?
18. வேலம் பட்டை மேகத்தைப் போக்கும்
ஆலம் பட்டை பித்தத்தைப் போக்கும்
19. சுக்கு இல்லாத காசாயம் உண்டா?
20. மனக்கவலை பலக்குறைவு
21. நார் அறுந்தால் முடியலாம்
மனம் அறுந்தால் முடியலாமா?
22. பாய்க்குத் தகுந்தபடி காலை நீட்டு
23. வரவுக்குத் தகுந்தபடி செலவிடு
24. வட்டி ஆசை முதலுக்கு கேடு

## பழந்தமிழர்கண்ட கால்நடை வளம்

| | |
|---|---|
| அளை | — மோர் |
| ஆ | — பசு |
| ஆய்மகள் | — இடைப்பெண் |
| ஆயம் | — பசுத்திரள் |
| ஆன்களம் | — பசுக்கூட்டம் |
| இமில் | — காளையின் கொண்டை |
| உதள் | — ஆட்டுக்கிடாய் |
| உழுபகடு | — உழுகின்ற எருது |
| எருது | — காளை |
| ஏறு | — காளை |
| கருநாகு | — எருமைக்கன்று |
| கறவை | — பாற்பசு |
| கானவர் | — முல்லைநிலமக்கள் |
| குழிசி | — மோர்ப்பானை |
| சிறுதாம்பு | — சிறியகயிறு |
| சேதா | ... சிவந்தபசு |
| துரு | — செம்மறியாடு |
| நுரைதெரிதல் | — வெண்ணெய் எடுத்தல் |
| பைஞ்சேறு | ... பசியசாணம் |
| மன்று | — மாடுகள் நிற்குமிடம் |

## பழந்தமிழர் கண்ட புல்வளம்

ஊகம்புல், எருவை, கண்பு, குருகு, செருந்தி, துராய், நரந்தம், நயவம், பகன்றை, புதவு, பைஞ்சாய்.

## பெரியசாமித்தூரன்

தமிழ்ப் பேரறிஞர் தம் பெயரைக் குறுகத் தறித்துத் தூரன் என வழங்குமாறு செய்து, நல்லாசிரியராய் நாடறிந்த கவிஞராயிருந்தார். அவரின் அறிவாற்றல்களை அளவிட்ட கல்வி மந்திரி கனம் அவிநாசிலிங்கம் செட்டியார் தமிழ்க் களஞ்சியக் குழுவுக்கு அவரைத் தலைவராக அமர்த்தினர். தமிழ்க்களஞ்சியம் விரைவில் உருவாகிப் பெரிய பரபரப்பை உண்டாக்கியது. திரு தூரன் குழந்தை மனம் கொண்டவராதலால் குழந்தைப் பாடல் வல்லவராயினர். அவர் எழுபத்தெட்டு ஆண்டுக்கிழவராய் மறைந்த போதிலும் அவர் பணி அவர் பெயரைத் தாங்கி நிற்கும் அவருடைய பாடல்கள் சிறுவர்களுக்கு ஏற்றவை.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Milk White products are
successful choice everywhere

★ உழுதொழில் நிற்கில் மறுதொழில் நடக்காது ★

## நாட்டுப்புற விஞவிடைப் பாட்டு

தேன் தேன்
என்ன தேன்?
கொம்புத்தேன்
என்ன கொம்பு?
மான்கொம்பு
என்ன மான்?
காட்டுமான்
என்ன காடு?
ஆற்காடு
என்ன ஆறு?
பாலாறு
என்ன பால்?
கள்ளிப்பால்
என்ன கள்ளி?
இலைக்கள்ளி
என்ன இலை?
வாழையிலை
என்ன வாழை?
கல்வாழை
என்ன கல்?
திண்டுக்கல்.

## நாட்டுப்புற நம்பிக்கைகள் சில

1. இரணைப்பிள்ளைகள் தடவினுல் சுளுக்கு மாறும்
2. காலால் பிறந்தபிள்ளை தடவினுல் சுளுக்கு மாறும்
3. ஐந்தாம் பிள்ளை பெண்ணுயின் நல்லது
4. ஆறும் பிள்ளை ஆணுயின் நல்லது
5. தைமாதம் குடிபுகுவதற்கு நல்லது
6. வீட்டில் பிணம் இருந்தால் அடுப்பு மூட்டலாகாது
7. புதுவீட்டுக்கு உப்பு எடுத்துப் போதல் நல்லது
8. இரவில் உப்பை சர்க்கரை எனக்கூறல் வேண்டும்
9. இரவில் உப்பை வெளியே கொடுத்தலாகாது
10. உணவைக் காலால் தொடுதலாகாது
11. சுமங்கலிகள் வெள்ளைச்சேலை அணியலாகாது
12. புதன் வாரம் புத்தாடை அணிவதற்கு நல்லது
13. பெண்கள் கைவளையல் அணிதல் கட்டாயம்
14. பெண்கள் கட்டாயம் திலகம் அணிதல் நல்லது
15. சனிக்கிழமைச் சவம் தனித்துப் போகாது
16. மரண ஊர்வலம் விழிவிசேடத்துக்கு நல்லது
17. பயணம் போகிறவர் போய் வருகிறேன் எனல் நல்லது
18. புதுவருட நாளில் பிரயாணம் ஆகாது
19. ஒரு காரியத்துக்கு மூவர் போதலாகாது
20. பயணம் போகிறவர் கடவுளை வணங்குதல் நல்லது
21. ஞாயிற்றுக்கிழமை பயணத்துக்கு ஆகாது
22. பயணம் புறப்படும்போது கட்டாடி அழுக்குத் துணியுடன் வந்தால் நல்லது
23. தாயும் பிள்ளையும் எதிர்வருதல் நல்லசகுனம்
24. கோயில் மணியோசை கேட்டல் நல்லது
25. சுமங்கலிகள் எதிர்வருதல் நல்லது
26. கருடனை எதிர் காணல் நல்லது
27. எருக்கடகத்தை எதிர் காணல் நல்லது
28. திருவிழா நடைபெறக் காணல் நல்லது

## வீட்டுத் தோட்டத்திற்கு

வீட்டு வளவில், பூச்சட்டிகளிலும் முற்றத்திலும் கிணற்றடியிலும் மதிலோரத்திலும் மண்வசதியுள்ள இடங்களிலும் கறிமிளகாய், தக்காளி, கத்தரி, வெண்டி, பசளி, கீரை, பாகல், பீர்க்கு, புடோல் முதலியன உண்டாக்க விரும்புகிறீர்களா?

### தோட்டம் செய்ய விரும்பினுல்

இலவசம் இலவசம். மேலே சொன்ன விதைகள் யாவும் அடங்கிய விதைப் பைக்கற் ஒன்றை மில்க்வைற் தொழிலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளுங்கள்.

### பதினைந்து ஆண்டுகள் தளரா முயற்சி

கமக்காரருக்கும், வீட்டுத்தோட்டக்காரருக்கும் விதைகள், நாற்றங்கால்கள் முதலியவற்றை நாடெங்கும் இலவசமாக வழங்கி வரும் தொழிலதிபர் கனகராசா அவர்கள் வாழ்க. அவர்களின் நற்பணிக்கு நாம் கை கொடுத்து உதவுவோமாக,

பொ. மாணிக்கவாசகர்
புலோலி. (ஓய்வுபெற்ற விவசாய உதவிப் பணிப்பாளர்)

## வரண்ட பூமியில் மழையும் பயனும்
(நாட்டுப்பாடல்)

பூவா மரங்கள் எல்லாம்
பூத்துச் சொரிந்தனவே
கிள்ளப் பழுத்தனவே
கிளிகள் வந்து சேர்ந்தனவே.
செந்நெல் விளைந்தனவே
தேசஞ் செழித்தனவே
பயிர்கள் விளைந்தனவே
பலனைக் கொடுத்தனவே!

### உழவுவேலையில் விடுகதை

மூக்கு மூன்றுண்டு
முகத்தாறு கண்ணுண்டு
நாக்கு நான்குண்டு
நடக்குங்கால் பத்துண்டு
(உழவன், மாடுகள், கலப்பை)

### தென்னிலங்கையர் திருக்குறள் படிப்பார்களா?

இனிமேல் தென்னிலங்கையர் தங்கள் மொழியிலேயே திருக்குறள் படித்து மனிதராக வாழ்வதற்கு வழிவகுத்தவர் சாள்ஸ் த. சில்வா என்பவராவர். அது எப்படியாயின் அவர் திருக்குறளைச் சிங்களமொழியில் மொழி பெயர்த்துக் கொடுத்துள்ளார்.

★ உழவுத் தொழிலில் கால்நடைகளின் உதவி மேலானது ★

## அவர்கள் யாவர்?

மண்ணை நம்பி, மண்ணுக்கு உழைத்து, மண்ணால் வாழ்கின்ற பண்ணையாளர்கள் அவர்கள். களனி அறிந்தவர்கள். அவர்களுக்கு நிலம்தான் சொத்து, உயிர், வாழ்வு, கடவுள். மண்ணுக்கு உழைப்பதில் அவர்களுக்கு மகிழ்ச்சி, பூரிப்பு. அவர்கள் என்றும் உழைப்பவர்கள். ஓயாமல் உழைப்பவர்கள். ஒரே குரலிற் பாட்டும் பாடுபவர்கள். ஒத்துதவி என்பது அவர்களின் கூடிப்பிறந்த பண்பாடு. தண்ணீர் இறைத்த போது ஒத்துதவி. இருவர் துலா மிதிக்க, ஒருவர் நீரிறைக்க, ஒருவர் பாய்ச்சுகின்றார், பாத்திகட்டுகிறார். ஒருமைப் பாட்டில் செந்தமிழ்ப் பாட்டு நாவையசைக்கிறது, நண்பர்கள் ஓசை நயமாகக் கேட்கிறது.

''முன் மிதிக்கும் தோழா!
என்ன வேணும் பாலா!
மோரும் கூழும் ஆனால்
மொந்தை ஆனால் போதும்
பின் மிதிக்கும் தோழா!
என்ன வேணும் பாலா!
சாறும் சோறும் ஆனால்
சட்டி ஆனால் போதும்.
வாங்குதடா தண்ணீர்!
வளருதடா சம்பா
கதிர் உழக்கு நெல்லு,
கட்டுக் கலம் காணும்!

கதிர் ஒன்று உழக்கு நெல் தருமாம். கட்டு ஒன்று ஒரு கலம் நெல் தருமாம். ஒன்று விதைக்க ஓராயிரம் நெல் விளையுதாம். தமிழ்ப்பாடல் கேட்ட பயிர் இன்னும் கூட விளையுதாம்.

''பார்த்த பயிரெல்லாம்
பாதி கதிரோடே!
மோட்டுத் தலையிரண்டும்
முடியக் கதிரோடே!

ஆற்றுநீர் வற்றிய பின் அங்கே துரவு தோண்டி நீரிறைப்பார்கள். வேலைக்குப் போகிறவன் கட்டுச்சோறு கட்டி வருமாறு மனைவிக்கு அன்புக் கட்டளையிடுகிறான்.

ஆறு கட்டப் போறேன்
சோறு கட்டி வாடி
சோற்றுக்கென்ன மாற்று
சொல்லிப் போங்கள் அத்தான்
தோட்டத்திலே கீரை
தோப்பிலுள்ள மாங்காய்

இயற்கை வாழ்வின் இன்பம் வேறெங்கே இருக்கிறது? வீட்டில் அடுப்பு மூட்டாமல் கடையில் எடுப்பு எடுத்து உண்பதால் இருக்குமா? இருக்காது. இருக்காது.

### படைவீரர் படையெடுக்கவேண்டும்

படை வீரர் பலவான்களாயின் கசிப்பு, கஞ்சா, அபின் குகைகளைத் தேடிக் கண்டுபிடித்தால் நாட்டுக்கு நற்பணி செய்தவராவர்.

## விளையும்பயிர்

— கொத்தமங்கலம் சுப்பு —

விளையும் பயிரை முளையில் பார்த்து, தலையிற் சேற்றைக் குழைய மிதித்து நடுதல் வேண்டும். உள்ளம் என்னும் பள்ளச் செய்யில் உண்மை ஏரை நாட்டினோம், ஊரும் நாமும் சோடி சேர்ந்து உழவுக்காளை பூட்டினோம். கள்ளம் என்னும் களையைப் பிடுங்கி கல்வி மடையைப் பாய்ச்சினோம். நாற்று நட்ட கைகளுக்குச் சோற்றுக் கவலை தீருமே. நாலு நாட்டைப் போல நமது நாடும் வீடும் ஏறுமே. பாத்தி கட்டி வளர்த்த பயிரை பார்த்துப் பலரும் புகழவே, பையன் போல பயிர் விளைஞ்சு பார்த்து நாமும் மகிழவே. பயிர்கள் நன்றாய் விளைந்து வந்து பசியைத் தீர்க்கு மாதிரி பையன் நன்றாய்ப்படித்து வந்தால் பஞ்சம் அஞ்சி ஓடுமே. பண்ணைக்காரன் பார்வையில்லாப் பயிர்கள் கெட்டுப் போய்விடும்.

[சவர்க்காரத்தின் தரமும், தன்மையும் அதனைத் தயாரிக்க உபயோகிக்கும் மூலப்பொருள்களின் சிறப்பைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன.]

[என்றும் எப்பொழுதும் உங்கள் உடுபுடைவைகள் தூய்மை வெண்மை துலங்குவதற்கு எங்கள் சவர்க்காரம் இன்றியமையாதது.]

[மாணுக்கியர் தம் சீருடைகள் பால் போலப் பளிச்சென்று விளங்க எங்கள் நீலம் கலந்த சலவைப் பவுடர் உதவிசெய்யும். உபயோகித்துப் பாருங்கள்]

## வெண்மைப் புரட்சி கண்டவர் கொடுத்த சீதனம்

பட்டி நிறைந்திருக்கும்
பால்மாடு சீதனங்கள்
ஏரி நிறைந்திருக்கும்
எருமை மாடு சீதனங்கள்
குட்டை நிறைந்திருக்கும்
குறியாடு சீதனங்கள்
உட்கார்ந்து மோர்கடையும்
முக்காலியும் பொன்னாலே
சாய்ந்து மோர்கடையும்
சாய்மணையும் பொன்னாலே
இழுத்து மோர்கடையும்
இசிக்கயிறும் பொன்னாலே

### இயற்கைப் பசளை இடுக

ஆட்டெரு, மாட்டெரு, கோழிக்கழிவு, பசுந்தாள் எல்லாம் கூட்டாயின் தலைசிறந்த இயற்கைப் பசளையாகும். பசுந்தாள் பசளையில் சணல் உச்சமானது. சணை விதைத்து மடித்து உழுதல் நல்லது, விவேகமானது. ஏரினும் நன்றாம் எருவிடுதல். நிலம் களைப்படையாமல் இருப்பதற்கு இயற்கை மருந்து பசளை. இயற்கைப்பசளை போதாது எனக் கண்டால் அளவறிந்து இரசாயனப் பசளை இடலாம்.

★ சொந்தக்காரன் இல்லாமல் பயிர் விளையாது ★

## பண்ணின் பரவசம்

பாடல்களுக்குப் பண் அவசியம். நாட்டுப் புறப்பாடல்களிலும் பல் வேறு பண்கள் வந்துபோகின்றன. பண்ணில்லாத பாடல் இறகில்லாத பறவை. பாடலின் உயிர் இசையிலேதான் இருக்கிறது என்பர்.

நாட்டுப்புறப் பாடல்களில் புன்னுகவராளி, நாத நாமக்கிரியை, ஆனந்தபைரவி, சைந்தவி, செஞ்சுருட்டி, குறிஞ்சி, நௌரோஜ், நீலாம்பரி முதலியன வருகின்றன. நாட்டுப் புறப்பாட்டுக்களின் தனித்தனி மெட்டு மிகவும் நன்றாகவுள்ளது.

## முரசு கொட்டுவோம்

( மறைமுடிவல்லத்தரசு பிளுங் )

கலைகள் எங்கும் மாண்புறவே
முரசு கொட்டுவோம் — நம்மின்
நிலைகள் யாவும் உயர்ந்திடவே
முரசு கொட்டுவோம்.

புலவர் என்றும் வாழ்க என்று
முரசு கொட்டுவோம் — நில
உழவர் என்றும் வெல்க என்று
முரசு கொட்டுவோம்.

## நல்லதொரு நினைவு மலர்

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங் கடல் வையத்து" என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிய வகையில் இவ்வுலகில் தோன்றி, "சிந்தனை செய்ய மனம் அமைத்தேன், செப்பநாவமைத்தேன், வந்தனைசெய்யத் தலைஅமைத்தேன், கை தொழ அமைத்தேன்" என்று சேரமான் பெருமாள் நாயனுர் அருளியவண்ணம் வழிபாடாற்றி வாழ்ந்து, ஊக்கத்துக்கு ஊக்கமாய், ஆக்கத்துக்கு ஆக்கமாய் விளங்கி. மக்கள் பேரர், பீட்டப்பிள்ளைகண்டு முதிர்ந்து ஆயிரம் பிறைகள் கண்டு, ஆனந்தமாய், ஏகாதசி வேளையில் அமரரான உயர்திரு. சுப்பையா இரத்தினம் என்னும் பெரியரின் நினைவாக, சுருவில் திருமுறைக் கழகத்தினர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் முதற்சைவ வினுவிடையை மிக்க அருமையாக அழகாக செட்டியார் அச்சகத்தில் வெளிவரச் செய்துள்ளார்கள். இதற்குப் பொருளுபகரித்த உற்றேர் பெயர் வாழும்.

## சவர்க்காரம் என்னும் சோப்

சவர்க்காரம் என்பதற்கு உவர்க்காரம், ஏமசீவன், காந்தல் மலர், குருமறை, கூர்மையாளன், சிருஷ்டியாளன், சிற்பரை, சுயம்பாகி, சூலானேன், சோமன், பவளம், பாதத்தோன், முத்தி, மூர்க்கன், ரவி, வழலை, வாதமுடிப்போர், வாதத்தின் தலைவன், வெண்சாமரை முதலிய பெயர்கள் இடப்பட்டிருந்தன.

## வெள்ளைப்புரட்சி

பால் வெள்ளை, தயிர் வெள்ளை, மோர் வெள்ளை, மிஞ்சிய பாலெல்லாம் வெண்ணெய் — நெய். கமக்காரன் வளர்க்கும் செல்லப்பிராணி, செல்வப்பிராணி பசு. அது மாடு; மாடு என்ருல் செல்வம். காலையில் பால் சுரந்தபின் மேயப்போகும் பசுவுக்கு வீட்டுக்காரி விடுக்கும் வேண்டுகோள்.

அந்திக்கு வா பசுவே!
அமுதம் பொழி பசுவே!

அது எப்படியான பசு, என்பதெல்லாம் பாடலில் கூறப்படுகிறது.

மலை ஏறி மேய்ந்து வரும்
மணிக்கழுத்து வெள்ளைப்பசு!
மாலையிலே வீடுவரும்
மணிக்கழுத்து வெள்ளைப் பசு!
மணியோசை முந்திவர
மந்தையுடன் சேர்ந்துவரும்
கழுத்துமணி ஒலிகேட்டுக்
கன்று துள்ளும் பால்குடிக்க!

வீட்டிலே பால், தயிர், மோர், நெய் எதற்கும் குறையில்லை. அன்று அந்தப் பூனை பரணேறி எல்லா வற்றையும் குடித்து உடைத்துவிட்டது. வெளியே சென்றுவந்த வீட்டுக்காரி வியப்படைந்து அடுத்தவீட்டுக் காரியிடம் முறையிடுகிருள்.

நாத்தனுரே, பெண்ணே!
ஏச்சுதோடி, பூனை!
பாலையுங் குடித்துப்
பால்பானை உடைத்து
மோரையுங் குடித்து
மொந்தையும் உடைத்து
தயிரையுங் குடித்துத்
தயிர்ப்பானை உடைத்து
வீட்டின் மேலே ஏறி,
விட்டதோடி பூனை!
இளைய மைத்துனர்க்கு
என்ன சொல்லப் போறேன்!
மூத்த மைத்துனர்க்கு
மோருக் கெங்கே போவேன்!

## நாவலர் முதற் பாலபாடம்

வாழை குலைபோட்டது
புழுகு சம்பா மணக்கிறது
வரகு சோறு புசித்தேன்
சாமை அரிசி கொண்டுவந்தான்
கேள்வரகு கதிர் விடுகிறது
கம்பங்கூழ் குடித்தேன்
இரண்டு மாம்பழம் பறித்துத்தா
இந்த மாம்பழத்தைத் தின்
இந்தத் தோட்டம் விசாலமானது

★ முல்லை நிலத்தில் ஆடு, மாடு, எருமை வளர்ந்தன ★

# வளர்ந்துவரும் நாட்டுப் பொருளாதாரம்

வாழைப்பழம், அம்பலவி மாம்பழம், கறுத்தக்கொழும்பான், இராசவள்ளிக்கிழங்கு, பனங்கிழங்கு, முருங்கைக்காய் முதலியனவுக்குப் பெயர் போன எங்கள் வடபிரதேசம், உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், திராட்சைப்பழம், கரட், பீட், பயற்றங்காய் முதலானவற்றுக்கும் பெயர்பெற்று, வல்லாரை, பொன்னாங்காணி முதலானவற்றுக்கும் பெயர் பெறுகிறது. பலவித அவரைகள் இலைதெரியாமற் காய்க்கின்றன. வீட்டுத் தோட்டங்கள் குரோட்டன் வகைகளை விலத்திவிட்டன. பிள்ளைகள் விளையாட்டாக நட்டு நீரூற்றியவை இன்று வீடு வந்து சேர்ந்து விதம்விதமான கனிகளாகின்றன. மல்லி, சீரகம், உள்ளி எல்லாம் எங்கள் பிரதேசத்தில் நன்றாய் விளைகின்றன. பலவினப் பப்பா மரங்கள் சுவையான பழங்களை நாள்தோறும் தருகின்றன. பலவித வாழையினங்கள் நாள்தோறும் குலை தள்ளுகின்றன. முட்டைக்கோவா மலைநாட்டோடு போட்டியிட்டு இங்கே வளர்கிறது. மரவள்ளி இனங்கள் பெரிய கிழங்குகளைத் தருகின்றன. மண்பரவு கிழங்குகளில் மகத்தான கருணைக்கிழங்கு வருடம் முழுவதும் வைத்துச் சமைக்க விளைகிறது. சோயாவும், உளுந்தும், அரிசியும், சத்துணவிற் சிறந்து சிவாகாரமாய்ப் புரதம் உயிர்ச்சத்து நிறைந்த உணவாகின்றன. புரதந்ததும்பும் நிலக்கடலை மணிலாத்தீவை பின்தள்ளிவிட்டது. பொருளாதாரப் பூரிப்பு பொங்கிப் பரவுகிறது.

அழகுதரும் கூந்தல் நரைத்தால் அல்லது உதிர்ந்தால் மனவருத்தம் தானே! கண்டபடி விஞ்ஞானப் பண்டங்களைத் தலையில் தேய்த்து மனவருத்தமடையாமல் எலுமிச்சங்கோது, வெந்தயம், பயறு, அரப்பு முதலியன கொண்டு அரைத்த ஒலிவ் ஸ்நானப் பவுடரைத் தேய்த்துத் தலை முழுகிப்பாருங்கள்.

## பூமித்தாய்

நிலம் என்னும் நல்லாள் எவ்வுயிருக்கும் தாய். பூமாதேவி, பூதேவி, பூமித்தாய் என்று கோடிக்கணக்கான உயிரினங்கள் கொண்டாட அவள் அரவணைத்துச் சுரந்து கொடுக்கின்றாள். நிலந்தரு திரு மிகவதிகம். ஒன்றும் இல்லை என்று சோம்பி இருப்பவனைப் பார்த்து அவள் சிரிப்பாள். அவளின் இயற்கை அழகும் வளமும் நிறைந்தது. அவள் குறிஞ்சியாய், முல்லையாய், மருதமாய், நெய்தலாய் - நானிலமாயிருப்பவள். இவ்வடிவங்கள் முறைமையில் திரிந்து இயல்பு மாறினால் பாலை வடிவம் உண்டாகும். நன்னிலத்தைப் பாவிகள் பாலையாக்கியிருக்கிறார்கள். இன்றும் பாலையாக்குகிறார்கள். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி, காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை, வயலும் வயல்சார்ந்த நிலமும் மருதம், கடலும் கடல்சார்ந்த நிலமும் நெய்தல், நானிலங்கள் யாவும் வளம் தருவன. மலைபடு திரவியம், காடுபடு திரவியம், வயல்படு திரவியம், கடல்படு திரவியம் கணக்கில்லாதவை. திரவியங்களை எடுப்பதற்கு முயற்சி வேண்டும். வரண்ட பூமியானாலும், வானம் பார்த்த பூமியானாலும், தினை, சாமை, கம்பு, சோளம், இறுங்கு பயிராகிவந்தன.

## நாட்டுப்புறத்து நல்லவர் நாவினிக்கக் கூறும் நயவுரைகள்

### மதுவிலக்கும் புகைவிலக்கும்

குடும்பம் கெடுக்கும் கள்ளு—போதை
கொடுக்கும் அபினைத் தள்ளு

உடம்பைத் துளைக்கும் புகை — புகையே
உடம்பை ஒடுக்கும் பகை

மக்கள் மனைவி எல்லாம் — குடியால்
முக்காலம் அடையும் துன்பம்

மக்களை மிருகம் என்றே — முதியோர்
மதிப்பா ரப்பா குடியரை

## மண்ணை நம்பி

மண்ணை நம்பி மரமிருக்க,
மரத்தை நம்பி கிளையிருக்க,
கிளையை நம்பி இலையிருக்க,
இலையை நம்பி பூவிருக்க,
பூவை நம்பி பிஞ்சிருக்க,
பிஞ்சை நம்பி காயிருக்க,
காயை நம்பிக் கனியிருக்க,
கனியை நம்பி நீயிருக்க,
உன்னை நம்பி நானிருக்க,

— நாட்டுப்பாடல்

### உவர்மண்

உவர்மண் சவர்க்காரத்தின் வேலையை முற்காலத்தில் செய்தது. உவர்மண்ணை சங்கினி, பூமாதா, பூமிச்சுருக்கம், மேதினி முதலிய பெயர்களால் வழங்கினர்.

## இறுதியாத்திரை கண்ட ஒன்றரைக் கோடிமக்கள்

அன்று 3-2-1969 தமிழ்நாட்டில் சோகக் குரல், அமைதி, இறுதியாத்திரை தலைவர் அண்ணா அவர்களை நினைந்து வரிசையில் போனவர்கள் 1,50,00000 மக்கள்.

### மரங்கள்

கிராமப்புறமக்கள் மரங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மரங்களை வழிபட்டனர். மரங்களினடியில் வழிபடு தெய்வங்களை நிறுவினர். மரத்தை அபிவிருத்திக்குறியீடாகக் கொண்டனர். அரச மரத்தடியில் பிள்ளையார் இருப்பது வழக்கம். இங்ஙனமே வில்வம், வேம்பு, கடம்பு, மருது, ஆல் முதலிய மரங்கள் வாழ்வை மலர்த்தின.

மக்கள் மாரியை வழிபட்டு மாரியை வரவழைத்தனர் ''ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது. மாரிகடன் தீர்த்தவர்களுக்கு மனக்கவலை தீருமம்மா'' எனநம்பினர்.

★ களை எடுக்காதவன் விளை எடுக்கமாட்டான் ★

# வேளாண் மாந்தர்

விவசாயிகளை வேளாண்மாந்தர் என்று தொல்காப்பியர் 2600 ஆண்டுகளுக்கு முன்னரே போற்றியுள்ளார். வேளாண் மாந்தர் எல்லா உயிர்க்கும் உணவு தந்தவர். வேளாண்மை செய்தற்கு இல்லறம் நல்லது என்று திருவள்ளுவர் போற்றியுள்ளார். வேளாண்மை என்றால் உதவிசெய்தல் என்பதே கருத்து. வேளாண்மை செய்து விருந்தோம்பல் என்பர். விவசாயி தானே எருதுகளை ஓட்டி உழுது விதைப்பான். ''எருது தொழில் செய்யாது ஓடவிடும் கடன் வேளாளர்க்கு இன்று'' என்பது சங்க இலக்கியம்

## சங்க இலக்கியம் கண்ட வேளாண்மை

சங்க இலக்கியம் எனக் கருதப்பெறுவன எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் இருதொகுதிகளுள் அடங்கிய பதினெட்டு நூல்களாம். இவை தொகையும் பாட்டும் என வழங்குவன. வேளாண்மை தமிழ்நாட்டின் பழம்பெரும் தொழில். இலக்கியங்களில் விரவிக் கிடக்கும் வேளாண்மை, அறிவியல் வளம் விசாலமானது, இவற்றில் ஆயிரக் கணக்கான வேளாண் சொற்கள் பரவிப் பயின்றுவந்துள்ளன. அவற்றுள் ஒருசில இவை.

### எட்டுத்தொகை

| | | |
|---|---|---|
| அசும்பு | ... | சேறு |
| அதரிதிரித்தல் | ... | சூடுமிதித்தல் |
| அரி | ... | கதிர் அறுக்கும் காலம் |
| அல்லி உணவு | ... | சோறு |
| அவிழ் | ... | சோறு |
| அவைத்தல் | ... | குற்றுதல் |
| ஆப்பி | ... | பசுவின் சாணம் |
| ஆய்கரும்பு | ... | சிறந்த கரும்பு |
| ஆயர் | ... | இடையர் |
| ஆன்பயம் | ... | பசுப்பால் |
| ஆனுருக்கு | ... | பசுநெய் |
| இறடி | ... | திணை |
| இனநிரை | ... | பசுக்கூட்டம் |
| எறிந்தபடை | ... | கொழு |
| எறிபுனம் | ... | சேனைநிலம் |
| ஏரின் வாழ்நர் | ... | உழவர் |
| ஏரோர் | ... | உழவர் |
| ஏனல் | ... | திணை |
| ஐவனம் | ... | மலைநெல் |
| கடைசியர் | ... | உழத்தியர் |
| கருவை | ... | வரகுவைக்கோல் |
| கழனி | ... | வயல் |
| கழமர் | ... | உழவர் |
| கறி | ... | மிளகு |
| காய்நெல் | ... | விளைந்தநெல் |
| கார்ப்பெயல் | ... | கார்காலத்துமழை |
| குடஞ்சுட்டு | ... | கறவைப்பசு |
| குப்பை | ... | தானியக்குவியல் |
| குரல் | ... | தானியக்கதிர் |
| குலவுக்குரல் | ... | வளைந்த கதிர் |
| குறுதல் | ... | குற்றுதல் |
| கூடு | ... | குதிர் |
| கூலம் | ... | பதினெட்டுவகை |
| கைவினைமாக்கள் | | தொழில்புரியும் உழவர் |
| பெற்றம் | ... | பசு |
| முதைப்புனம் | ... | முற்றிய திணைப்புனம் ( தானியங்கள் ) |
| மேழி | ... | கலப்பை |
| வடவளம் | ... | வடநாட்டு விளைவு |
| வல்சி | ... | சோறு |
| வாங்கியகதிர் | ... | நீண்ட கதிர் |
| வினைஞர் | ... | உழவர் |

### பத்துப்பாட்டு

| | | |
|---|---|---|
| எக்கர் | ... | ஆற்று மணலாலானது |
| கட்சி | ... | காடு |
| கடறு | ... | காடு |
| கல்லகம் | ... | கற்றறை |
| களர் | ... | களர்நிலம் |
| கா | ... | சோலை |
| கார்கோள் | ... | கடல் |
| கானம் | ... | காடு |
| கோடு | ... | மேட்டுநிலம் |
| சிலம்பு | ... | மலை |
| சுரம் | ... | காடு |
| சுவல் | ... | மேட்டுநிலம் |
| துடவை | ... | தோட்டம் |
| புறவு | ... | காடு |
| மிசை | ... | மேடு |
| வரை | ... | மலை |
| வெற்பு | ... | மலை |
| அகழ் | ... | குளம் |
| இடா | ... | நீரிறைக்கும் பட்டை |
| இலஞ்சி | ... | மடு |
| கயநீர் | ... | குளத்துநீர் |
| கொழு | ... | உழும் கருவி |
| கோட்டினம் | ... | எருமைக் கூட்டம் |
| கோட்தெங்கு | ... | குலைகளையுடைய தென்னை |
| சாடி | ... | உழுசால் |
| சாலிநெல் | ... | செந்நெல் |
| சிவிறி | ... | நீர்வீசுங் கருவி |
| சுழல்மரம் | ... | தானியம் அரைக்குங்கருவி |
| செஞ்சால் உழவு | | மறித்து உழுதல் |
| தகர் | ... | ஆட்டுக்கிடாய் / மேட்டுநிலம் |
| துடவை | ... | தோட்டம் |
| துரு | ... | செம்மறியாடு |
| துளா | ... | களை, மண்வெட்டி |
| தொடுப்பு | ... | விதைப்பு |
| தொழுவம் | ... | பசுக்கள் கட்டுமிடம் |
| தோகை | ... | நெல்லின் தாள் |
| தோப்பி | ... | நெல்லாற் செய்த கள் |
| நவியம் | ... | கோடாலி |
| ஞாஞ்சில் | ... | கலப்பை |
| நீத்தம் | ... | வெள்ளம் |
| நுவளை | ... | திணைமா |
| நூறை | ... | வள்ளிக்கிழங்கு |

★ வழிந்தோடும் புதுவெள்ளத்தை வரவேற்பான் உழவன் ★

| | |
|---|---|
| நெரியல் ... | மிளகு |
| படப்பு ... | வைக்கோற்போர் |
| பாசவல் ... | புதிய அவல், விளைநிலம் |
| பாட்டம் ... | தோட்டம் |
| பாடுபெயல் ... | விடாமழை |
| பாண்டியம் ... | உழவு |
| பீள்வாடும்நெல் | கதிர்வாடும் நெல் |
| புல் ... | புன்செய்தானியம் |
| கல்சிறை ... | கல்அணை |
| கார்ப்பெயல் ... | மாரிமழை |
| கான்யாறு ... | காட்டாறு |
| தலைப்பெயல் ... | முதல்மழை |
| துருத்தி ... | ஆற்றிடைநிலம் |
| தூவல் ... | மழை |
| பெயல் ... | பருவகால மழை |
| கயம் ... | ஆழமான குளம் |
| அரிநெல் ... | அரிகின்ற நெல் |
| அகல் வயல் ... | அகன்ற பெரிய வயல் |
| அறை ... | கரும்புப் பாத்தி |
| ஆர்வை ... | வரகு வைக்கோல் |
| இருவி ... | தினைத்தாள் |
| ஏர் நடத்தல் ... | எருதுகள் உழுதல் |
| ஏனல் ... | தினை |
| ஐவனம் ... | ஒருவகை நெல் |
| கட்பு ... | களை எடுத்தல் |
| கருக்காய் ... | எள்ளின் காய் |
| கருவை ... | வரகு வைக்கோல் |
| கவ்வை ... | எள்ளின் இளங்காய் |
| கழனி ... | வயல் |
| களமர் ... | உழவர் |
| களைஞர் ... | களை பிடுங்குவோர் |
| காழ் ... | விதை |
| குப்பை ... | நெற்பொலி |
| குரல் ... | கதிர் |
| சுவல் ... | மேட்டுநில நெல் |
| செறு ... | வயல் |
| தண்பணை ... | குளிர்ந்த வயல் |
| தோப்பி ... | நெல்லால் வடித்த கள் |
| நறவு ... | ,, |
| நாறு ... | நாற்று |
| நீடுதல் ... | நெல்வளர்தல் |
| நீறு ... | உழுதுவந்த புழுதி |
| படப்பை ... | தோட்டம் |
| பழனம் ... | மருதநிலம் |
| பால்வார்தல் ... | நெல்லில் பால்பிடித்தல் |
| புதுவை ... | புதிய வைக்கோல் |
| புனம் ... | கொல்லை நிலம் |
| பெருங்குரல் ... | பெரியகதிர் |
| பொம்மல் ... | தினைச்சோறு |
| மெல்லவல் ... | மென்மையான வயல் |
| வருகதிர் ... | வெளிவந்த கதிர் |
| வித்துதல் ... | விதைத்தல் |
| வை ... | வைக்கோல் |
| குதிர் ... | நெல் சேமிக்கும் களஞ்சியம் |
| குயம் ... | அரிவாள் |
| கூனிகுயம்... | வளைந்த அரிவாள் |
| நாஞ்சில் ... | கலப்பை |
| புதவு ... | நுகம் |

## தம்பதிகளுக்கு எங்கள் வாழ்த்து

அண்மையில் திருமணஞ் செய்துகொண்ட எங்கள் தமிழ்ச் செல்வங்களுக்கு எங்கள் மனங்கனிந்த மங்கள வாழ்த்து.

"பூவும் மணமும் பொருந்திய தன்மைபோல்
தேவியும் மன்னவனும் சேமமாய் வாழ்ந்திருங்கள்
பாலும் சுவையும்போல் பார்தனிலே எந்நாளும்
பூமகளும் நாயகனும் பொற்பாக வாழ்ந்திருங்கள்
கன்னியின் கற்பும் கணவனின் மெய்மொழியும்
இந்நில மெல்லாம்விளங்க இன்பமாய் வாழ்ந்திருங்கள்
ஆயுசு தீர்க்கமுடன் அம்மனுடை தன்னருளால்
நாயகனும் நாயகியும் நலமாக வாழ்ந்திருங்கள்
தலைப்பிள்ளை ஆண்பெறுவீர் தகப்பனர் பெயரிடுவீர்
மறுபிள்ளை பெண்பெறுவீர் மாதா பெயரிடுவீர்
பேறுபதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திடுவீர்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
நலமுடனே எந்நாளும் ஞானமுடன் வாழ்ந்திடுவீர்.

## தென் இலங்கையர் தமிழார்வம்

தென்னிலங்கையர் பலர் அன்று தொடக்கம் அருந் தமிழார்வங் கொண்டு, இங்குவந்தும் தமிழ் கற்றுப் புலமை பெற்றிருந்தனர். நம்மவருள் பலர் சிங்கள மொழியினை மிக்க ஆழமாகப் பயின்று கவிகளாயிருந்தனர். முல்லைத் தீவுச் சுப்பிரமணியம், காரைநகர் தம்பிப்பிள்ளை, முன்னுள் உயர் நீதி மன்றப் பதிவாளர் நவரத்தினம் முதலானோர் சிங்கள மொழியில் பெருமளவில் ஆற்றல் பெற்று அரசபணி புரிந்தனர்.

இன்று தென்னிலங்கையைச் சேர்ந்த டி. டி. நாணயகார, சாள்ஸ் டி. சில்வா ஆகிய இருவர் அரசறியத் தமிழ்ப் புலமை நடாத்திப் பட்டமும் பரிசும் பெற்றுள்ளார்கள். தமிழ் வனுந்தர வாசிகள் மொழியல்ல. வாழ்வு மிக்க நாகரிக மாந்தரின் மொழி. உலகில் ஐம்பதுக்கு மேற்பட்ட நகரங்களில் தமிழார்வம் தலைதூக்கியுள்ளது. உலகில் பெரிய பல்கலைக் கழகங்களில் தமிழ் வளர்கின்றன. உலகத் தமிழராய்ச்சி மாநாடுகள் — ஒலிம்பிக் அளவில் நடைபெறுகின்றன, நேற்று முளைத்த காளான்கள் தமிழின் பெருமையை அறியாமலிருக்கலாம். தமிழைப் படித்த பிறமொழியாளரைப் பாராட்டுகிறோம்.

## பிலிப்பீன்ஸ் நாட்டு அறுவடைக்கூத்து

அறுவடை செய்த விளைவு வீடுவந்து சேர்ந்ததும் ஆடல், பாடல், விருந்து யாவும் சேர்ந்த பெருவிழா அங்கே நடைபெறும். விழாவில் தங்களுக்கு விவசாய விருத்திக்கு அருள் செய்த தெய்வங்களுக்கு நன்றி செலுத்துமுகமாக நிகழ்ச்சிகள் நடைபெறும். அக்காலத்தில் அரசவிடுமுறைக் காலமுமாகும்.

— ஆதாரம் - ஏசியா மகஜீன்

★ கல்வியில்லாப் பெண்கள் களர் நிலம் ★

# வேளாண்மைப் பண்பாடு

மனிதன் முதலில் காய், கனி, கிழங்கு, தேன் உண்டும், வேட்டையாடி உண்டும் வளர்ந்தான். இங்ஙனமாக வாழ்ந்த வாழ்வு நாடோடி வாழ்வு. பின்னர் ஓரிடத்தில் தங்கி வாழ்ந்த போது பயிரிடக் கற்றுக் கொண்டதோடு பசு முதலிய மிருகங்களில் பால் கறக்கவும் அறிந்து கொண்டான். நாளடைவில் காதல், வீரம், கொடை, அருள், அறம், ஒழுக்கம், கடமை முதலியவற்றை முறையாக உணர்ந்துகொண்டான்.

நிலத்தைப் பண்படுத்தப் பழகியவன் தன்னையும் பண்படுத்திக் கொண்டான். சுற்றத்தைக் கவனித்து வாழத்தலைப்பட்டான். காடு மேடாகக் கிடந்த நிலத்தை நன்செய் நிலமாக்கியவன் மனிதன், தன்னைத் தானே திருத்திக் கொண்டமை நாகரிகமாகிப் பண்பாடாகி மலர்ந்தது. பொறாமை, ஆசை, வெகுளி, வன்சொல் எல்லாவற்றையும் படிப்படியாகப் போக்கிப் பொறுமை, இன்சொல் முதலிய நற்குணங்களுக்கு இடங்கொடுக்கப் பழகிக் கொண்டான். நாடோடி நகரமாந்தனாகி உருவாகி வாழ்வதற்குப் பல தலைமுறைக் காலம் கடந்திருக்கலாம். வரலாற்றில் நூறாண்டு ஒருநாள் போலக் கழிந்துள்ளது.

மனிதன் பாடறிந்து வாழும் பண்பாடு பழகியதோடு ஆன்மீக வளர்ச்சியடையவும் உழவு வழிகாட்டியுள்ளது. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அப்பர் அருளிய திருமுறை உழவின் சிறப்பையும் உள்ளத்தின் உயர்வையும் உறுபயனையும் விளைவையும் கூறுகிறது.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து,
விருப்பு எனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறை எனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு,
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையுமன்றே"

1. காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்
2. உழவுத்தொழிலில் கால் நடைகளின் உதவி மேலானது
3. முல்லை நிலத்தில் ஆடு, மாடு, எருமை வளர்ந்தன
4. களை எடுக்காதவன் விளை எடுக்க மாட்டான்
5. வழிந்தோடும் புதுவெள்ளத்தை வரவேற்பான் உழவன்
6. கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்
7. கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி
8. உள்ளூர் மருமகனும் உழுகிறகிடாவும் சரி
9. சொந்தக்காரன் இல்லாமல் பயிர் விளையாது
10. ஈரத்தைப் பார்த்து உழு. விதையைப் பார்த்து நடு
11. மண்ணைத் திருத்திப் பொன்னைப் பெருக்கு
12. உழுதொழில் நிற்கில் மறுதொழில் நடக்காது
13. முப்போகம் பயிரிட்டால் முன்னேற்றம் அடையலாம்
14. நிறைந்த மனத்துடனே நிலத்தைப் பயிரிடுவோம்
15. உரம் உதவுவது போல் ஊரார் உதவமாட்டார்

# கமநல சேவையிற் கவனம்

கமக்காரன் இயற்கையோடிணைந்த வாழ்வு வாழ்பவன். எனவே அவன் இயற்கைப் பசளை வகைகளையே இன்றியமையாதவையெனக் கருதுபவன். சித்தவைத்தியம் செய்யும் வேலையை இயற்கைப் பசளை செய்யும். அது நிலத்தைக் கெடுக்கமாட்டாது. இயற்கையாக வாடி வதங்கி உதிரும் இலைவகைகள் மா, பலா இலைகள் தவிர ஏனையவை விரைவில் உக்கி உரமாவன. இவற்றோடு எரு, சாம்பல் முதலியனவும் சேர்ந்தால் தலைசிறந்த கூட்டுப்பசளையாகும். கழிவுக்கடதாசிகள் முன்னர் கிலோ ஒரு ரூபா விற்ற காலம் மீண்டு வந்தால் ஒரு கிலோ குப்பை அரைரூபா விலை போகலாம். கழிவைக் காசாக்கும் காலம் வரும்.

நல்ல விதைகள் கிடைக்காமலே, வரண்ட நிலத்திலே விவசாய வளம் காண்பவன் வீரத்தமிழன். வளமில்லா நிலத்தை வளம்படுத்துபவன் வள்ளல். அவனே தலைசிறந்த விவேகியும் விஞ்ஞானியுமாவன். கிராமப் பொருளாதாரம் விவசாயியின் கையிலேதான் தங்கியுள்ளது. அவன் உண்ணக்காய்கறி தருவான். உடுக்கப் பஞ்சு விளைவித்துத் தருவான். எண்ணெய், பால், தயிர், நெய் எல்லாம் தருவான். ஏற்றம் அவன் தோளில் ஏறிடு மாறுல் அவன் உழுது நன்செய்பயிர்கள் வளர்ப்பவன். வரப்புயர நீருயர உரமுயர உழவுயரும். உழவுயர ஊருயரும். ஊருயர நாடுயரும். நாடுயர உலகுயரும். உலகுயரச் செய்பவன் உழவனே.

## மண் சோதனை

பர்மா நாட்டில் அமோக நெல் விளையும் நிலங்களில் மண் பரிசோதனை நடைபெறுகிறது. எந்த மண்ணுக்கு என்ன அளவில் பொசுபரஸ் தேவை என்றெல்லாம் சோதனை செய்து விளைவைப் பெருக்குகிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 5000 இடங்களின் மண் ஆராயப்படுகிறது. டாக்டர் யூகின்வின் என்பாரும் டாக்டர் விற்றின் என்பாரும் பரிசோதனை நிபுணராயிருக்கிறார்கள். சிறிய நகரங்களில் பலவிடத்து வயல்மண் வந்து பரிசோதனைக்கு எடுக்கப்படுகின்றன.

## மேழி பிடிக்குங் கை

மேழி பிடிக்குங் கை வேல் வேந்தர் காக்குங்கை. அதனாலே அந்தத் தொழிலுக்கு வந்தனை செய்வோம். பல இனநெல், சிறுதானியங்கள், பருப்புவகைகள், மிளகாய், வெங்காயவகைகள், கிழங்குவகைகள், பழவகைகள் எல்லாம் உண்டாக்குவோம். வங்கிகள் கடனுதவி பெற்று குழாய்க்கிணறு துளைத்து நிலத்தை வளஞ்செய்வோம். தீவிரசாகுபடிக்கு உரம் அவசியம். மாற்றுப்பயிர் செய்வதை மறந்துவிடலாகாது. மாற்றுப்பயிர் செய்வதால் நிலம் வளம் பெறும். பல முறை கொத்துதல் உழுதல் நிலத்துக்கு நல்லவை. மனிதன் பண்பாடு அடைவதன் முன் நிலமே பண்பாடடைந்தது.

No washing is complete without
MILK WHITE BLUE SOAP

★ கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி ★


# பசுமைப்புரட்சியும் வெண்மைப் புரட்சியும்

முருகேசர் கந்தையாபிள்ளை மில்க்வைற் நீலக்கட்டி செய்வதற்கு 1927 ஆம் ஆண்டில் ஆரம்பவேலை செய்த போது தொழிலகம் அமைக்கவில்லை. எவ்வித இயந்திர சாதனங்களையும் அறியவில்லை. தமது ஒழுக்குக் கொட்டில் வீட்டில் தமது கைகள், தமக்கு எடுத்த காரியம் யாவினும் தடாது கைகொடுத்த மனைவி மீனாட்சிப் பிள்ளையின் கைகள், அயலவர் ஒரு சிலரின் ஆதரவுப் பலம் என்பனவற்றையே நம்பித் தம் கருமத்தை எண்ணித் துணிந்தார். குடிசைத் தொழிலாய் ஆரம்பித்தவேலை விரைவாக வளர்ந்து தொழிற்சாலையைக் கண்டது. திருக்கல் வண்டில்கள் சைக்கிள் வண்டில்கள் ஓய்வு கொள்ள மோட்டார் வாகனங்கள் ஓடித்திரிந்தன. மீனாட்சிப்பிள்ளையின் கைகள் ஓய்வு கொள்ள இயந்திரங்கள் இயங்கத் தொடங்கின. கந்தையாபிள்ளை கதிரையில் இருப்ப மைந்தன் கனகராசா ஓடித்திரியலானார்.

ஆங்கிலேயரின் வர்த்தகக் கம்பனிகள் இறக்குமதி செய்த சவர்க்கார வர்க்கங்களோடு மில்க்வைற் தயாரிப்புகள் போட்டியிட்டு இடம் பிடித்தது. அயலவர் ஊரவர் என்னும் ஆதரவு பரந்து பிரதேசம் நாடு என வியாபகம் கிடைத்தது. அமோக ஆதரவு அணையவே, வருமானத்தில் ஒரு பகுதி அறச்செயல்களுக்குப் பயன் தந்தது. அறச்செயல்களைத் தொடர்ந்து கல்விப்பணி பரந்தது. கல்விப்பணிக்குப் பின் சமூகப்பணி ஆரம்பித்தது. சமூகப்பணியில் விவசாயம், பண்ணைவளர்ப்பு, உள்ளூர் உற்பத்திகள், நெசவு, மரம் நாட்டும் பணி, பனையபிவிருத்தி எனப் பல நோக்குத் திட்டம் தயாரானது.

விவசாயப்பணி புரட்சிகரமாக வளரவேண்டும். மரம் நாட்டும் பணி மங்கலகரமாக எங்கும் எப்போதும் நடைபெறவேண்டும். பனையபிவிருத்தி பரவலாக எங்கும் படரவேண்டும். இவற்றுக்கெல்லாம் ஆதரவாளர்கள், உதவி செய்வோர் அணைதல் வேண்டும். தெய்வச் செயலால் எல்லா வசதிகளும் வந்து வாய்க்கவே பசுமைப் புரட்சிக்கு மரம் நாட்டு வைபவம் பிரதேசமெங்கும் நடைபெற்றது.

மரம் நாட்டு வைபவத்துக்கு கன்றுகள், தடிகள், விதைகள், வேர்கள் எல்லாம் வந்து குவிந்தன. கிடையாதன விலைக்குக் கிடைத்தன. இனிமேல் எல்லாவற்றையும் வீட்டிலேயே தயாரிப்பதற்கு வளவு நிறைய நாற்றுப் பண்ணைகள் உண்டாயின. மரம் நாட்டும் பணி பரவவே எங்கும் பார்வதி அம்மன் நிறம் பச்சை பச்சையாயிற்று. பாலகிருஷ்ணன் விரும்பும் பசுமையாயிற்று. பாலசுப்பிரமணியன் மயில் போல் பசுமை விரிந்து ஆடிற்று. பசுமைக்குப் பின் வெண்மைப் புரட்சிக்காகவே வீட்டுக்கொரு பசுவை விரும்பி வளவுங்கள் என்னும் சுலோகம் ஒலித்தது. அந்த ஒலி வீதிவாய்க் கேட்டதும் மக்கள் வீடுகள் தோறும் பசு வளர்க்க விரும்பினார்கள். பசுக்களுக்கு வேண்டிய பசுமையான புல், தழை தருவதற்குப் புல் நறுக்குகள், இப்பில் இப்பில் மரக்கன்றுகள் பெருமளவில் தயாராயின. இனி நாடு நாடாக வேண்டும். மக்சள் மனிதராய் வாழ வேண்டும். உழைப்பு உறுதியாக நிலை பெறுதல் வேண்டும் உரிமை பேணப்பட வேண்டும்.



## பஞ்ச தந்திரம்

### துக்கத்தை அநுபவிப்பவர்கள்

வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், சந்தோசப்படாதவன், குரோதமுள்ளவன், தீராத சந்தேகம் உள்ளவன், பிறர்பொருளால் சீவிக்கிறவன்,

### வெளியே சொல்லக்கூடாதவை

பொருள் இழந்தமை. வீட்டு இரகசியம், தானம், மானம், அவமானம், ஆயுள், தனம். (உடையது விளம்பேல்)

### இலட்சுமி தேடிவரும் இடங்கள்

உற்சாகமுள்ளவன், சந்தோசமுள்ளவன், தைரியசாலி சூரன், களங்கமில்லாதவன்.

### நிலையில்லாதவை

மேகச்சாயை, துஷ்டனின் தயவு, இளம்புல், இளமை, அழகு, தனம்.

### மனோபலம்

யானை பெரிதாக இருந்தாலும் சிங்கக்குட்டி அதனைக் கொல்லும். மனோபலமே பெரிது.

## பொலனறுவை மாவட்டம்

பொன்பூச் சொரியும் கொன்றையும், நறுமணங் கமழும் வில்வமும் நிரம்பிய பொலனறுவைக் காடு இன்று பசுமை குறைந்து வருகிறது. அங்கே இயவல்லிக் கிழங்குகள் பலவிடங்களில் பரவலாகக் கிண்டியெடுக்கப் பெறுகின்றன. முன்னர் சோழப் பெருமன்னர்கள் விஜயபாகு மன்னனுக்கு முன்னர் செய்தளித்த அழகிய பார்வதியம்மையின் திருவுருவங்கள் இன்று வெளியே வருகின்றன.

## இளைஞர்கள் நடபடிக்கை எடுப்பார்களா?

இன்று சமுதாய சிரமைப்புக்குத் தங்களை அர்ப்பணித்துச் சேவை செய்துவரும் இளைஞர் யுவதிகள் மதுவுக்கும் புகைக்கும் விடுதலை கொடுத்து மக்கள் வாழ்வை மலர்த்துவார்கள் என்று பெண்கள் உலகம் வேணவாவுடன் எதிர்பார்க்கிறது.

★ உள்ளூர் மருமகனும் உழுகிற கிடாவும் சரி ★

## கணேசையா அவர்களுக்கு நூறு

புன்னாலைக்கட்டுவன் வித்துவான் கணேசையா அவர்களுக்கு 15-3-1987 இல் நூறாண்டு வரப்போகிறது. எங்கள் பிரதேசத்துப் பத்திரிகைகள் யாவும் இயன்றளவு அவரைப் பற்றி எழுதிச் சிறப்புமலர் வெளியிடுதல் நன்றாகும்.

அவர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் முறையாகக் கற்று, பாரம்பரியத்தை வளர்த்தற்குப் பலருக்குக் கல்வி கற்பித்து, வரன்முறை தவறாத் தமிழறிஞர்களை உருவாக்கியவர். அவரின் தமிழ்ப்பணி தமிழ்நாட்டுப் புலவர்களையும் கவர்ந்தது. தமிழ்நாட்டுச் செந்தமிழ்ப் பத்திரிகையில் இலக்கிய இலக்கணக் கட்டுரைகள் நிறைய எழுதியதோடு ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியவர். தமிழ்ப்புலவர் வரலாறு எழுதிப் புகழ்பெற்றதோடு, பழைய இரகுவம்சத்துக்கும் உரை எழுதியவர். நாட்டுக்கோட்டைச் செட்டிமாரின் பாராட்டை நிறையப்பெற்ற இவருக்கு விநாயகப் பெருமானின் திருவருள் நிறையக் கிடைத்தது. ஐயரவர்கள் அடிக்குறிப்பு, விளக்கக்குறிப்பு முதலியன ததும்பத் தொல்காப்பியத்தை நான்கு பெரிய நூல்களாக வெளியிட்டுத் தந்துள்ளார். அவருக்கு வள்ளல் ஈழகேசரிப் பொன்னையா அவர்கள் வாய்த்தமை தமிழ்த்தாய் கொடுத்த வரப்பிரசாதமேயாம். ஐயர் அவர்களின் பெருமையைத் தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச்சங்கத்துத் தமிழேடான தமிழ்ப் பொழில் காலத்தில் வெளியிட்டுப் போற்றியது.

ஈழத்தார் அன்னாருக்குப் பாராட்டுவிழா, பட்டமளிப்பு விழா, பொற்கிழி விழா எடுத்துப் போற்றியுள்ளார்கள். புன்னாலைக்கட்டுவனில் அவருடைய சிலை அருமையாக அமைந்துள்ளது. அவரின் நூற்றாண்டு விழாவை அமைதியாகக் கொண்டாடுவதானால், நூலகங்கள்தோறும் அவரின் படம் இடம்பெறலாம். பாடசாலைகள்தோறும் காலையில் அவரின் நினைவுப்பேச்சு இடம்பெறலாம். அவரின் பெருமையை 1915 ஆம் ஆண்டிலேயே சுன்னாகம் குமாரசாமிப்புலவர் அவர்கள் பல பாடல்களிற் புகழ்ந்துள்ளார்.

'' மாமதுரைத் தமிழ்ச்சங்க மாசிக பத்திரமாகி
வரிசை பெற்ற
காம்ருசெந் தமிழினிடைக் கற்பவர்களுளங்கொள்ளக்
கம்ப நாடன்
பாமருவு நுண்பொருளுங் கவித்திறிவும் பலவேறு
பண்டை நூலின்
தோமருவா மெய்ப்பொருளும் வரைந்தளித்தோ
னெழுக்கமிகுஞ் சுகுணசீலன்.''

இங்ஙனமாகவே உ. வே. சாமிநாதையர், புலோலிக் குமாரசுவாமிப் புலவர், வித்தகங் கந்தையாபிள்ளை, சோமாஸ்கந்த பண்டிதர் முதலானோரும் கவிபாடிச் சிறப்பித்துள்ளார்கள். ஐயரவர்களோடு ஆறுதலாக உரையாடும்போது தமிழமுதந் திவலை திவலையாகத் தெறிக்கும் அவர் புகழ் வாழ்க.

## 1987 மார்ச்மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 2. | திங்கள் | — ஊரெழுப்பிள்ளையார் கொடி<br>கவிக்குயில் சரோஜினி நினைவு |
| 5. | வியாழன் | — கார்த்திகை விரதம்<br>ஸ்ராலின் நினைவு |
| 7. | சனி | — பகல் 7 - 03 அட்டமி |
| 8. | ஞாயிறு | — அட்டமி நவமி<br>கச்சியப்பசிவாசாரியார் குருபூசை |
| 9. | திங்கள் | — நவமி பகல் 10-47 வரை |
| 11. | புதன் | — ஏகாதசி விரதம்<br>அலெக்சாண்டர் பிளெமிங் நினைவு |
| 12. | வியாழன் | — பிரதோஷ விரதம் |
| 13. | வெள்ளி | — மாசிமகம் |
| 14. | சனி | — நடேசர் அபிஷேகம்<br>சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் நினைவு<br>கார்ல்மாக்ஸ் நினைவு |
| 15. | ஞாயிறு | — தமிழ்ப்பங்குனி<br>பூரணைவிரதம் |
| 18. | புதன் | — காரைக்கால் அம்மையார் குருபூசை |
| 20. | வெள்ளி | — ஐசாக்நியூட்டன் நினைவு |
| 21. | சனி | — பாண்டித்துரைத் தேவர் பிறந்த [நாள் |
| 22. | ஞாயிறு | — பகல் 10-34 அட்டமி |
| 23. | திங்கள் | — அட்டமி - நவமி<br>சத்தியமூர்த்தி நினைவு |
| 25. | புதன் | — ஏகாதசி விரதம்<br>வண்ணை சிவன் கொடி |
| 26. | வியாழன் | — திருக்கோணேஸ்வரம் கொடி<br>நா. கதிரைவேற்பிள்ளை நினைவு |
| 27. | வெள்ளி | — பிரதோச விரதம்<br>சைமன் காசி செட்டி பிறந்தநாள் |
| 29. | ஞாயிறு | — அமாவாசை விரதம்<br>வல்வை வைத்தீசர் கொடி<br>மருதடி விநாயகர் கொடி |
| 30. | திங்கள் | — ஈழகேசரி பொன்னையா நினைவு |
| 31. | செவ்வாய் | — எஸ். ஜே. வி. பிறந்தநாள் |

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மீனே - மீனே

மீனே மீனே மின்னும் மீனே
தண்ணீ ருக்குள் தாவும் மீனே
கெண்டை அவரி கெளுத்தி மீனே
என்னே ரமும்நீ தண்ணீ ருக்குள்
மூழ்கி யிருந்தால் மூச்சடைக் காதோ
என்னே ரமும்நீ தண்ணீர் வீட்டில்
குஞ்சுக ளுடனே கூடியி யிருந்தால்
சொக்கா யில்லை துணிகளு மில்லை
கம்பளி யாடைகள் கட்டவு மில்லை
கூதல் வந்தால் ஏதுநீ செய்வாய்? — தூரன்

★ ஈரத்தைப் பார்த்து உழு விதையைப் பார்த்து நடு ★

## விவசாயப் பழமொழிகள்

1. அகல உழுவதைவிட ஆழ உழு
2. அந்து அரித்த நெல் முளையாது
3. அறிவிலே விளையாதது எருவிலே விளையும்
4. அறுகு முளைத்த வயல் அதோகதி
5. ஆடி அவரை தேடிப்போடு
6. ஆடி அவரை கார்த்திகைக்குக் காய்
7. ஆடி வாழை தேடி நடு
8. ஆடி விதை தேடி விதை
9. ஆடு ஊடாடக் காடும் விளையாது
10. ஆட்டெரு அவனுக்கு மாட்டெரு மகனுக்கு
11. ஆட்டெரு அவ்வருடம் மாட்டெரு மறுவருடம்
12. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும்
13. ஆழ உழுதல் ஆட்டுரத்திலும் அதிகம்
14. ஆழ உழுதாலும் அடுத்தடுத்து உழு
15. ஆழ உழு அடர விதை
16. ஆறுகொத்து நூறுஇறைப்பு ஆறுசீப்பு நூறுகாய்
17. ஆற்று மண்ணுக்கு வேற்றுமண் உரம்
18. ஆனி கொடுகினால் அறுபதுநாளைக்கு மழையில்லை
19. இளைத்தவன் எள்ளு, வலுத்தவன் வாழை
20. இறைப்புக்கெல்லாம் ஒரே விளைவு
21. ஈயுந்தனையும் எருவிடு, காயுந்தனையும் களை எடு
22. ஈரூரில் உழுதவன் இரண்டும் கெட்டான்
23. ஈரூர் வேளாண்மை இரு தாரத்துக்கு நேர்
24. உரம் உதவுவது ஊரார் உதவார்
25. உரம் ஏற்றி உழவுசெய்
26. உழவற உழுதவன் ஊரிற் பெரியவன்
27. உழவாற் பயிராவது எருவாலாகாது
28. உழவுக்கு மிஞ்சிய ஊதியமில்லை
29. உழுகிற காலத்தில் ஊரைவிட்டுப் போகாதே
30. உழுத காலாலே உலப்பிவிடு
31. உழுதவன் ஒருபோதும் கெட்டதில்லை
32. உழுது அலர்ந்தது பழுதாகாது
33. உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை
34. எட்டடி வாழையும் பத்தடி பிள்ளையும்
35. எருக்குழி இன்றி ஏர் பிடிக்காதே
36. எரு இல்லாத வயல் கன்றில்லாத பசு
37. எருது இளைத்தால் எல்லாம் இளைக்கும்
38. என்ளுக்கு ஏழு உழவு கொள்ளுக்கு ஒருழவு
39. ஏரை இழந்தார் பேரை இழந்தார்
40. ஓதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையில்
41. கத்தரிக்குக் கிழமில்லை
42. கரணைக்கு ஐந்து கொத்து ஐம்பது தண்ணீர்
43. களை எடாதவன் விளைவு எடான்
44. களை எடுக்காத பயிர் காற்பயிர்
45. கறவை உள்ளவன் விருந்துக்கு அஞ்சான்
46. காய்ந்த நெல்லுக்குக் கவலை இல்லை
47. காருக்கும் கத்தரிக்கும் காலம் இல்லை
48. கார்த்திகைக்கு மிஞ்சிய மழை இல்லை
49. கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்
50. குப்பையில்லா வேளாண்மை சப்பை

## என்றும் மாறு விவசாயம்

ஆசிய நாடுகளாயினும், தென்கிழக்கு நாடுகளாயினும் பண்டைக்காலம் முதல் வேளாண்மைக்குப் பெயர் போனவை. அவை நாளடைவில் சமயஞ் சார்ந்த நாடுகள், சோசலிச சமுதாய நாடுகள், பொதுவுடைமைக் கோட்பாட்டு நாடுகள் என மாறியமைந்துள்ளபோதிலும் நாட்டுமக்கள் பூமி திருத்தியே உணவு தேடுகிறார்கள். பல நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றும் பொருளாதாரச் சுதந்திரம் பெறுமலியங்குகின்றன. நாட்டின் தன்னிறைவு காண்பதில் முதலிற் காணவேண்டியது உணவு நிறைவு. உணவுப் பற்றாக்குறையிருந்தால் நாடு நாடாகாது. தள்ளா விளையுள் முதலிலமையவேண்டியது. போதிய உணவு விளைவிக்கத் தெரியாமல் தேசியம் பேசுதல் பொருந்தாது. வெள்ளைக்காரரர் வேளாண்மையைப் புறக்கணித்துக் கோப்பியும், தேயிலையும் விளைவித்து நாட்டின் குளங்களைப் புறக்கணித்து, மக்களைச் சோம்பேறிகளாக்கிப் போனபின், தென்புலத்தார் நாடு நமதே என்று ஒரு முகக் குடியேற்றம், நீர்ப்பாசனம், விதை வழங்குதல், விலைகொடுத்தல் முதலான கெடுபிடிகள் செய்தபோதிலும், ஆழக் கிணற்றிலிருந்து வானம் பார்த்த பூமியை நனைத்துப் பயிரிட்டு, வாய்க்கு ருசியான உணவுப் பண்டங்களை விளைவிக்கும் தமிழன் குளத்தங்கரை நாகரிகத்தில் வளர்ந்தவன். தமிழன் பயிரிடும் வாழைப் பழம், மாம்பழம், முருங்கைக்காய் ஏன் கரட், இராசவள்ளி, மிளகாய், வெங்காயம் எல்லாமே வாய்க்கு இதமானவை.

---

## விவசாய விவேகம்

1. வெண்டைக்குச் சாம்பற் சத்து வேண்டும்.
2. பலவினப் பப்பாளி வரண்ட நிலத்தில் பயன்தரும்.
3. எள்ளு எங்கள் முதன்மையான எண்ணெய்ப் பயிர்.
4. இன்றைய கன்றுகள் நாளைய பசுக்கள்.
5. தானியப் பயிர்கள் தாராளமாக பயன்தரவேண்டும்
6. பயறு வகைகள் பயிர்ச்செய்கைக்கு பக்கபலமானவை
7. கரும்பும் கிழங்கு வகைகளும் கமத்துக்கு வேண்டியவை.
8. பழவகைகள் யாவும் பசியைப் போக்குவன.
9. மா வளரப் பலா வளர மகத்தான தோப்பாகும்.
10. வாழவைக்கும் வாழையை வகைவகையாய் நடவேண்டும்.
11. வயற்பாத்திகளில் ஒன்றில் வாய்ப்பான கிணறு அவசியம்.
12. இயற்கைப் பசளையே ஏருழுவாருக்கு ஏற்றது.

---

## வரண்ட வலய விவசாயம்


சேனைச் செய்கைக்குப் பின் காலந்தோறும் நிலத்தை நனைத்து உழுது பக்குவப்படுத்தும் முறை எங்கள் பிரதேசத்தில் இன்றும் நிலவுகிறது. இது மிகப் பழைய முறை. இதனால் குரக்கன், சோழம், இறுங்கு, உளுந்து முதலியன நன்றாகக் கிடைத்தன. இவற்றைத் தொடர்ந்து மரக்கறி வகைகள் விரைவாகப் பயன் தந்தன.

---


★ மண்ணைத் திருத்திப் பொன்னைப் பெருக்கு ★

## யோகாசனம்:

### மயூராசனம்



நிலை 1



நிலை 2

எங்களுட் சிலருக்கு மஞ்சட் காமாலை, மலச்சிக்கல், மூலவேதனை, நீரிழிவு முதலிய நோய்கள் தனியாகவும் ஒருமித்தும் வருவது உண்டு. சிலருக்குத் தொந்தி பெருத்து, பெருஞ்சதை பிடித்து அழகைக் கெடுப்பது உண்டு. சிலருக்கு மணிக்கட்டு, முன்கைப் பகுதி மெலிந்து சூம்பி இருக்கும். சிலருக்குச் சிறுகுடல் பெருங்குடல் செம்மையாக வேலை செய்யாமையால் உணவு நன்றாகச் சமிபாடு அடையாமல் வெளியே போகும்.

இவையாவும் அற்புதமாகச் சுகப்பட்டு ஒருவர் நல்ல முறையில் ஆரோக்கிய மடைவதற்கு ஒரு சதமும் செலவில்லாமல் சில நிமிட நேரம் மயூராசனம் செய்தாற் போதும்.

மயூரம் என்பது மயில். மயில் முற்பாரம் பிற்பாரம் எல்லாவற்றையும் மையத்தில் உள்ள கால்களால் தாங்கி அழகாக நடக்கிறது, ஆடுகிறது.

நீங்கள் செய்யவேண்டியது, மண்டியிட்டு உட்கார்ந்து நிமிர்ந்து இருந்தவாறு இருகைகளையும் ஒன்றாகச் சேர்த்து விரித்து, கைவிரல்கள் கால்பக்கம் நோக்கியிருக்குமாறு செய்து, உள்ளங்கைகளைத் தரையில் இரு முழங்கால்களுக்கும் இடையில் ஊன்றுக. வயிற்றை முழங்கைகளுக்கு மேல் நிறுத்திக் கால்களை ஒவ்வொன்றாகப் பின்னால் நீட்டுக. உடம்பை மெதுவாக முன்னால் சாய்க்கக் கால்கள் உயரமாகக் கிளம்பும். தரைக்குச் சமாந்தரமாக உடம்பு அமைந்தபின் மெதுவாகத் தலையை உயர்த்தி அண்ணாந்து பார்க்க முயலுக. சில நிமிட நேரத்தின்பின் பழைய நிலைக்கு வருக.

மண்டியிட்டு அமர்ந்த நிலையில் மூச்சை உள்ளே இழுத்து, பின் உள்ளங்கைகளைத் தரையில் அமர்த்தும் போது மெதுவாக வெளிவிடுக. கால்களைப் பின்னே நீட்டும்போது மூச்சை உள்ளே இழுத்து வயிற்றைக் கெட்டியாக்கி, பின் ஆறுதலாக விடுக.

எதுவும் அவசரப்படாமல் ஆறுதலாக எல்லா நிலைகளையும் படிப்படியாகப் படத்தைப் பார்த்துச் செய்க.

# வேளாண்மை வளரவேண்டும்

இயற்கை அன்னையின் மடியில் விளையாடும் விவசாயம் இன்னும் விளையாட வேண்டும். விவசாய விளையாட்டின் வெற்றிக் கொண்டாட்டம் பொங்கல் விழா. அதற்கு உதவியாய் உலாவிய மாடுகளுக்கு அடுத்த நாள் பட்டிப்பொங்கல். "வயிற்றுக்குச் சோறிட வேண்டும்' இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து— இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்" உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" வரப்புயர வேண்டும் நீருயர வேண்டும். நெல்லுயர வேண்டும். குடியுயரவேண்டும். நெல்லுயர வாழ்வுயரும். நெல்லைப் போல கோதுமை, சோளம், வரகு, தினை, குரக்கன், சாமை, கம்பு எல்லாம் உயரவேண்டும். மொச்சை, உளுந்து, பயறு, கடலை, சோயா மெத்தவுயர வேண்டும். கரும்பு உயரவேண்டும். இஞ்சி மஞ்சள் இனிதுயரவேண்டும். கிழங்கு வகைகள் பெருகவேண்டும். "நிலத்திற்கு அழகு தருவன நெல்லும் கரும்பும்" என்பது உறுதியாதல்வேண்டும். பலவினக் கரும்புகள் பாரெங்கும் பரவுதல் வேண்டும். நெல் கரும்பளவானால் கரும்பு கமுகளவாதல் வேண்டும். ஒரு நெல் விதைத்தால் ஓராயிரம் நெல் விளைதல் வேண்டும். ஏக்கரில் 250 தொன் கரும்பு விளைதல் வேண்டும்.


# விவசாய நாகரிகம்

கைத்தொழிற் புரட்சிக்கு முந்தியது விவசாயப் புரட்சி. விவசாயம் உழவுத் தொழில். உழவின் பின்னாலேயே உலகம் போய்க்கொண்டிருக்கிறது. கிளிநொச்சி காடாய்க்கிடந்த போது காடு கெடுத்து நாடாக்கி, குளந்தொட்டு வளம் பெருக்கப் போன வீரத்தமிழர், வீர வன்னியர் எங்கே? சோம்பேறிகளின் குடியேற்றம் எங்கே? கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிபுகுந்த கதையாயிற்று. சேர் இராமநாதன், அப்புக்காத்தர் குலசிங்கம், எம். ஏ. முத்துக்குமாரு இன்னும் எத்தனை தமிழ் முன்னோடிகள் முல்லை நிலத்தை மருத நிலமாக்கினார்கள். மருத நிலத்தை பாழ் செய்து பாலை நிலமாக்கும் பாதகர்கள் நீங்கும் காலம் நெருங்குகிறது. ஒரு குருவி ஒரு நெல்லைக் கொத்தியது கண்ட புலவன் "குருவி குருவி கொஞ்சம் நில். கொத்திய நெல்லைக் கீழே வை" என்று பாடத் தொடங்கி மேலும் கேட்டான். "நீ வரம்பு கட்டினாயோ, தண்ணீர் பாய்ச்சினாயோ, களை பிடுங்கினாயோ, காவல் காத்தாயோ, உனக்கு வயல் வேலையின் அருமை தெரியுமா சொல்" என்று கேட்டான். இத்தகைய கடும் உழைப்புக்களினால் வெயர்வை சிந்தியவன் வேறு யார்? தமிழன் என்னும் இனத்தவனேதான்.

விவசாய நாகரிகம் சமூகத்தைப் பாதிக்காத மனிதாபிமானமுள்ள வாழ்க்கை முறை. நெல்லும் உயிரன்றே, நீரும் உயிர் அன்றே என்று பாடியவன் தமிழன். நெற்பயிர் இசையின்பம் கேட்டு வளர்ந்து விளைவு தரும் என்று

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்)

★ நிறைந்த மனதுடனே நிலத்தைப் பயிரிடுவோம் ★



## அவதார மகிமை

ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் இருவரின் அவதார மகிமையில் இன்பங்கண்ட கதாதர், ஸ்ரீ இராமகிருஷ்ணர் எனப் புகழ்பெற்ற பெயர்பெற்று, உலகமெல்லாம் தம்புகழ் நிறுவித் தாம் சமாதியாயினூர். அண்மைக் காலத்து மெய்யுணர்வாளர் வரிசையில் அவர் பெயரே அவனியெங்கும் ஒலிக்கிறது. அவருடைய ஒலிப்பதிவு விவேகானந்த அடிகள் முதலானவர்களால் உலகமெங்கும் கேட்டது. இன்று தலைநகரங்கள்தோறும் அமைந்த பெருமடங்கள் தத்துவ மெய்ஞ்ஞானப் பயிர் வளர்க்கின்றன.

கடவுள் இல்லை என்பாருக்கும், நான் கடவுள் என்பாருக்குமிடையில் அவர் நான் கடவுள் இல்லை என்று கடவுளைக் காட்டியவராயிருந்தார். கடவுள் ஒருவர் இருக்கிறூர் என்று நம்பிக்கொண்டு ஸ்ரீ இராமகிருஷ்ணர் காட்டியவழியில் நடப்போமாக.

---

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

**விவசாய........**

கண்டவன் தமிழன். செங்கோல் செலுத்துபவன் இடத்திலேதான் மக்கள் உயிர் அடக்கம். கொடுங்கோலன் உயிர்களைக் கொன்றூல் நெல் விளையாது. தேன் கிடையாது. கிழங்கு விழாது. பசு கன்று ஈனுது. பஞ்சம், பிணி, புயல், நிலச்சரிவு முதலிய உற்பாதங்களே விளையும்.

விவசாயம் தொடர்ந்து நடைபெற வேண்டிய தொழில். பதினெட்டாம் நூற்றூண்டில் இங்கிலாந்தின் மந்திரியார் ரவுண்செள், பிரதமர் வால்போல் என்பாரோடு கருத்து வேற்றுமை கொண்டு, விவசாயப்பணி செய்தபோது கண்ட புதிய முறைகள் பயிர்களை மாற்றிப்பயிரிடுதல் முதலியனவாம். சீரான விவசாயம் ஒரு நாளில் வராது அப்பனே. அனுபவம் பெறச் சில ஆண்டுகள் வேண்டும். அவசரப்பட்டு விவசாயத்தை வெறுக்காதீர் தான் செய்தவற்றையும், செய்யப் போவனவற்றையும், செய்ய வேண்டியனவற்றையும் ஆராய்தல் அவசியம்.

தொழிலின் மகத்துவம் பெரிது. சாணி அள்ளுதல் நல்ல தொழில். சந்தைப்படுத்தும் போது கொள்ளும் இன்பம் சாணி அள்ளும் போதும் இருத்தல் வேண்டும்.


அதிக உணவு பயிரிடுக!




100 மில்க்வைற் நீலசோப் அல்லது
10 பார்சோப் அல்லது 10 சுப்ப
மில்க்வைற் மேலுறைகள் கொடுத்து
**'நாட்டிற்கு நயம் தருவன'**
என்னும் விவசாயக் கைநூலைப்
பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிகளுக்கே உதவுகிறது.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23233





யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1 - 3 - 87